TAM209C2

# குட்டியூண்டு முயல்

ஆதாரம்: Book for Children





ஒரு தோட்டத்தில் ஒரு குட்டி முயல் இருந்தது. அது எப்போதும் “நான் சின்னதாக இருக்கிறேன். எல்லோரும் என்னை விடப் பெரியவர்கள்” என்று கவலையாக இருந்தது. தினந்தோறும் அது மற்றவர்களோடு தன் அளவை ஒப்பிட்டுக் கொள்ளும்.



அப்பா என்னை விடப் பெரியதாக, பருமனாக இருப்பார்.



ஒரு கருஞ்சிட்டுக் குருவி என்னை விடப் பெரியது.



ஒரு முட்டைகோஸ் என்னை விடப் பெரியது.



அதுபோலவே ஒரு மரமும்!!!



ஆனால், நான் ஒரு கேரட் அளவு மட்டும் தான் இருக்கிறேன்.



நான் சாப்பிடுகிறேன், தூங்குகிறேன்,

விளையாடவும் செய்கிறேன்.



ஒவ்வொரு நாளும் நான், என்னை அளவு எடுத்துப் பார்க்கிறேன். கேரட்டை விட உயரமாக வளரவே இல்லை.



அக்கம் பக்கத்தில் வசிக்கும் முயல்கள் என்னைக் கேலி பேசுகின்றன.





ஆனால், அம்மா என்னை கட்டி பிடிப்பார்.

கன்னத்தில் முத்தம் தருவார். அப்பாவும் தான்.



ஒவ்வொரு நாளும் நான் பெரியவனாக வளர வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொள்வேன்.



அன்று ஒருநாள், நான் கேரட்டை விட
பெரியவனாக வளர்ந்து இருந்தேன்.



மிகவும் சந்தோஷமாகத் தோட்டத்திற்குள் ஓடினேன்... குதித்தேன்... ஆடினேன்... பாடினேன்...





“அதோ, குட்டியூண்டு முயல்கள். ஒரு பூவை விட சின்னதாக… ஐயோ! பெரிய முயல்கள்… குட்டி முயல்களைக் கேலி செய்கின்றன.”



“நிறுத்துங்கள்! பெரிய முயல்களிடம் போய் சண்டை போடுங்களேன்?” என்று கத்தினேன். அவைகள் ஓடிவிட்டன.



“முயல் அண்ணா, என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி” என்று சொன்னது குட்டியூண்டு முயல்.



“ஒருகாலத்தில் நானும் குட்டியூண்டு முயலாகத் தான் இருந்தேன். இப்போது ஒரு பெரிய முயலாக வளர்ந்து விட்டேன்” என்று பதில் சொன்னேன்.